

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.8.2025) தலைமைச் செயலகத்தில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறையின் சார்பில் நடைபெற்ற விழாவில், 40 பசுமைத் தோழர்களுக்கு முதலமைச்சரின் பசுமைப் புத்தாய்வுத் திட்ட நிறைவுச் சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்வில் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, கூடுதல் தலைமைச் செயலாளர் சுப்ரியா சாஹு, இயக்குநர் ஆ. ர. ராகுல் நாத், வனத்துறைத் தலைவர் ஸ்ரீனிவாஸ் ஆர். ரெட்டி, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத் துறை சிறப்புச் செயலாளர் அனுராக் மிஸ்ரா, பட வனத்துறை சிறப்புச் செயலாளர் ஆஷிஸ் குமார் ஸ்ரீவஸ்தவா, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய தலைவர் முனைவர். எம். ஜெயந்தி, அண்ணா பல்கலைக்கழக பதிவாளர் முனைவர். ஜெ. பிரகாஷ், அண்ணா பல்கலைக்கழக ஆற்றல் கல்விகளுக்கான நிறுவனத்தின் இயக்குநர் எம். வெங்கட ரமணன் ஆகியோர் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.8.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இக்கூட்டத்தில், சிறப்பு திட்டச் செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப்சிங் பேடி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஆர்.வி. ஷஜீவனா, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நாளை 6–ஆம் தேதி காலை நகராட்சித் துறையில் பணி நியமன ஆணைகளை வழங்கிட வருகை தரும்

# கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

## கழகத்தினர் திரண்டு வந்து பங்கேற்பீர்! அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

சென்னை, ஆக.5-

நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நாளை 6-ஆம் தேதி காலை நடைபெறும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நேரடி நியமனத்திற்கான பணி நியமன ஆணை வழங்கிட வருகை தரும், தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத்தினர் திரண்டு வந்து, கண்டோன்மெண்ட் - பட்ரோடு அண்ணா சிலை அருகில் நாளை காலை 9.30 மணியளவில், மாபெரும் வரவேற்பு அளித்திட வேண்டும் என்று, மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள



அறிக்கை:-

தமிழ்நாடு அரசின் சார்பில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நேரடி நியமனத்திற்கான பணி நியமன ஆணை வழங்கும் விழா ஆலந்தூர் தொகுதி, நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் உள்ள கூட்ட அரங்கில் நாளை 6-ஆம் தேதி காலை 10.30 மணி அளவில் விழா நடைபெறவுள்ளது.

கழகத் தலைவர் -முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் இவ்விழாவிற்கு தலைமை வகித்து பணி நியமன ஆணை வழங்குகிறார்.

இவ்விழாவிற்கு வருகைத் தரும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கண்டோன்மெண்ட் அண்ணா சிலை அருகில் நாளை ஆகஸ்ட் 6-ஆம் தேதி காலை 9.30 மணியளவில், உற்சாக வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

இவ்விழாவிற்கு வருகை தரும், நம்முடைய உயிரனைய தலைவர் முதல்வர் தலைவர் தளபதி அவர்களுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் கண்டோன்மெண்ட் பட்ரோடு, அண்ணா சாலை அருகில் மேள, தாளம், பேண்டு வாத்தியம் முழங்க பிரம்மாண்டமான வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வரவேற்பில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மாவட்ட - மாநகர - பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் - கழக நிர்வாகிகள் - தலைமை செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் உள்ளிட்ட அனைவரும், பல்லாயிரக்கணக்கில் அணி திரண்டு வந்து பங்கேற்க வேண்டும் என்று, மாவட்டத்தில் உள்ள கழகத்தினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

### பீகார் வாக்காளர் பட்டியல் திருத்தத்தைக் கண்டித்து – ஆக. 8 அன்று

# தேர்தல் ஆணைய அலுவலகத்தை நோக்கி பேரணி!

## ‘இந்தியா’ கூட்டணிக் கட்சிகள் அறிவிப்பு!

புதுடெல்லி, ஆக.5-

பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த நடவடிக்கையை கண்டித்து வரும் 8ம் தேதி, புதுடெல்லியில் உள்ள தேர்தல் ஆணைய அலுவலகத்தை நோக்கி பேரணி நடத்த உள்ளதாக ‘இந்தியா’ கூட்டணி கட்சிகள் அறிவித்துள்ளன.

பீகாரில் தேர்தல் ஆணையம் மேற்கொள்ளும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கு காங்கிரஸ், திமுக உள்ளிட்ட நாடு முழுவதும் உள்ள எதிர்க்கட்சிகள் ஒட்டுமொத்தமாக எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

இதுதொடர்பாக நாடாளுமன்றத்திலும் எதிர்க்கட்சிகள் ஒருமித்த குரலை எழுப்பி வருகின்றன. சிறப்பு தீவிர திருத்தம் என்ற பெயரில் வாக்குகள் திருடப்படுவதாக குற்றம்சாட்டி உள்ள மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி, கடந்த 2024 மக்களவைத் தேர்தலில் சுமார் 100 தொகுதிகளில் முறைகேடுகள் நடந்திருப்பதாகவும் அதற்கான ஆதாரங்களை விரைவில் வெளியிடப் போவதாகவும் அறிவித்துள்ளார்.

இந்நிலையில், வரும் 7ம் தேதி டெல்லியில் இந்தியா கூட்டணி கட்சி தலைவர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் பீகார் விவகாரம் மற்றும் குடியரசுத் துணைத்தலைவர் தேர்தல் குறித்து முக்கிய ஆலோசனைகள் நடத்தப்பட உள்ளன.

குடியரசுத் துணைத் தலைவர் தேர்தலில் பா.ஜ.க.வை எதிர்த்து இந்தியா கூட்டணி கட்சிகள் சார்பில் வேட்பாளரை நிறுத்துவது குறித்தும் ஆலோசிக்கப்பட உள்ளது.

அதைத் தொடர்ந்து வரும் 8ம் தேதி டெல்லியில் உள்ள தேர்தல் ஆணைய அலுவலகம் நோக்கி பேரணி நடத்தி முற்றுகையிட எதிர்க் கட்சித் தலைவர்கள் திட்டமிட்டுள்ளனர்.



சென்னை, அரசு மனநல மருத்துவமனையில் ரூ.42 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு விரைவில் பயன்பாட்டிற்கு வரவுள்ள மனநலம் மற்றும் நரம்பியல் ஒப்புயர்வு மையம் கட்டுமானப் பணியினை அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு ஆகியோர் ஆய்வு செய்தனர். அ.வெற்றியழகன் எம்.எல்.ஏ., மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் (பொ) மரு.தேரணிராஜன், அரசு மனநல மருத்துவமனை இயக்குநர் மரு.மாலையப்பன், பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர் மணிகண்டன், கண்காணிப்பு பொறியாளர் கார்த்திகேயன், செயற்பொறியாளர் கோவிந்தராஜீலு மற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள் உடனிருந்தனர்.


